முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் I பரீட்சை – 2022 சனவரி

## (103) பொருளியல்

(Economics)

2022-03-26
பிற்பகல்
[2.00 – 5.00]

பக்கங்கள் : 06
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):
  (1) ***காலம் :*** *03 மணித்தியாலம்*
  (2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***
  (3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள* ***விடைப்புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே விடையளித்தல்*** *வேண்டும்.*
  (4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*
  (5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  (6) ***வரைபுத் தாள்*** *வழங்கப்படும்.*
  (7) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் செவ்வை நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***வினைச்சொல்லைக்*** *கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (8) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** தொடக்கம் **1.10** வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தினை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.1** மனிதனுடைய தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றுவதற்கான வளங்களின் மட்டுப்படுத்தப்பட்ட கிடைப்பனவு எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) சந்தர்ப்பச் செலவு
(2) அரிதான தன்மை (அருமை)
(3) பொருளாதாரக் கிரயம்
(4) விருப்பத்தெரிவு

**1.2** பின்வருவனவற்றுள் மூலதனத்திற்கான வெகுமதி (reward) எது?

(1) வட்டி
(2) வாடகை
(3) இலாபம்
(4) கூலி

**1.3** பின்வருவனவற்றுள் பணத்திற்கான கேள்விக்கு ஒரு காரணமாக **அமையாதது** எது?

(1) கொடுக்கல் வாங்கல் நோக்கம் (2) பிரதியீட்டு நோக்கம்

(3) முன்னெச்சரிக்கை நோக்கம் (4) ஊக நோக்கம்

**1.4** ஒரு குறிப்பிட்ட பண்டத்தின் விலை ரூபா 20/- இலிருந்து ரூபா 40/- ஆக அதிகரிக்கும்போது அப்பண்டத்தின் கேள்விக் கணியம் 20 இலிருந்து 10 ஆகக் குறைவடைகிறது. அப்பண்டத்தின் கேள்வியின் விலை நெகிழ்ச்சி (price elasticity of demand) :

(1) பூரண நெகிழ்ச்சியற்றது (2) நெகிழ்ச்சியற்றது

(3) ஒற்றை நெகிழ்ச்சி (4) பூரண நெகிழ்ச்சி

**1.5** நுகர்வோருக்கு சமனான திருப்தியையும் பயனையும் தருகின்ற இரண்டு பொருள்களின் தொடர்பினைக் காட்டும் வரைபு :

(1) கேள்வி வளையி ஆகும். (2) உற்பத்திச் சாத்திய வளையி ஆகும்.

(3) சமபயன் வளையி ஆகும். (4) நிரம்பல் வளையி ஆகும்.

**1.6** 2020 ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கைக்கு இணங்க, 2020 ஆம் ஆண்டிற்கான தலா வருமானம் (per capita income) :

(1) 3,682 அமெரிக்க டொலர் (2) 4,057 அமெரிக்க டொலர்

(3) 4,200 அமெரிக்க டொலர் (4) 3,924 அமெரிக்க டொலர்

**1.7** பின்வருவனவற்றுள் நேர் கிரயத்திற்கான ஓர் உதாரணமாக அமைவது எது?

(1) பொருளாதாரத் தேய்வு (2) சாதாரண இலாபம்

(3) பொருள்களின் கிரயம் (4) கைவிடப்பட்ட வட்டி வருமானம்

**1.8** பின்வருவனவற்றுள் மனித அபிவிருத்தி வரைவாக்கத்தில் (profile) **உள்ளடக்கப்படாத** உருப்படி எது?

(1) அரசியல் சுதந்திரம் (2) பொருளாதார நிலைப்புத்தன்மை

(3) சமத்துவம் (4) கல்வி

**1.9** பின்வருவனவற்றுள் நிதிசார் இடைத்தரகர்களுக்கான ஓர் உதாரணமாக அமைவது?

(1) குத்தகைக் கம்பனிகள் (2) ஊழியர் சேமலாப நிதியம்

(3) காப்புறுதிக் கம்பனிகள் (4) மேற்கூறிய யாவும்.

**1.10** கீழ்வரும் கூற்றுகளைக் கவனத்தில் கொள்க :

**(a)** நிறுவனமொன்றின் எல்லை வருமானமானது (MR) எல்லைக் கிரயத்திற்கு (MC) சமனாக இருக்கும்போது, அந்நிறுவனம் அதன் இலாபத்தை உச்சப்படுத்துகிறது.

**(b)** மேம்பட்ட தொழில்நுட்பங்களின் பொருளாதாரப் பயன்பாடானது அதிகரித்துச் செல்லும் அளவுத்திட்ட விளைவுகளுக்கு இட்டுச் செல்லும்.

**(c)** உற்பத்திக் காரணிகளின் பிரிக்கப்படாத தன்மையானது குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவுக்கு இட்டுச் செல்லும்.

மேலுள்ளவற்றுள் சரியான கூற்று / கூற்றுக்கள் :

(1) **(c)** மாத்திரம் (2) **(a)** யும் **(b)** யும் மாத்திரம்

(3) **(a)** யும் **(c)** யும் மாத்திரம் (4) **(b)** யும் **(c)** யும் மாத்திரம்

*இல. **1.11** மற்றும் **1.12** ஆகிய வினாக்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புவதற்குச் சரியான சொல் / சொற்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்க. தெரிவு செய்யப்பட்ட சொல் / சொற்களை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.11** தனியுரிமைப் போட்டி நிறுவனங்கள்.............. *(நீண்ட கால ஓட்டத்தில் / குறுங் கால ஓட்டத்தில்)* சாதாரண இலாபங்களை மாத்திரம் உருவாக்குகின்றன.

**1.12** பொருள்கள் மற்றும் சேவைகளின் விலைகள் அதிகரிக்கும்போது பணத்தின் பெறுமதி .............. *(உயர்வடைகிறது / வீழ்ச்சியடைகிறது)*.

*கீழே **1.13** மற்றும் **1.15** இல் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** எனக் குறிப்பிடுக. உமது விடையை (சரியானது / தவறானது) உரிய வினா இலக்கத்துடன் விடைப் புத்தகத்தில் குறிப்பிடுக.*

**1.13** குறுங் கால ஓட்ட உற்பத்திச் செயன்முறையில் நிலையான காரணி உள்ளீடுகள் இல்லை.

**1.14** குறைந்து செல்லும் எல்லை விளைவு விதியானது மாறும் காரணி உள்ளீடுகள் ஓரினத்தன்மையுடையவை எனவும் உற்பத்திச் செயன்முறை நெடுகிலும் மாறாத தொழில்நுட்பம் ஒன்று காணப்படுகிறது எனவும் கருதுகிறது.

**1.15** நிரம்பல் விதியின்படி, பொருளின் விலைக்கும் அந்தப் பொருளின் நிரம்பல் கணியத்திற்கும் இடையில் நேர்மாறு (எதிர்) தொடர்பு காணப்படுகிறது.

**1.16** *தொடக்கம்* **1.20** *வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்திற்கு எதிரே எழுதுக.*

**1.16** கேள்வி வளையியை வலப் புறமாக நகர்த்தும் இரண்டு (02) காரணிகளைக் குறிப்பிடுக.

**1.17** சிலருரிமைச் (Oligopoly) சந்தையின் இரண்டு (02) பண்புகளைக் (characteristics) குறிப்பிடுக.

**1.18** "கேள்வியில் மாற்றம்" என்பதால் கருதப்படுவது யாதென சுருக்கமாக விபரிக்குக.

**1.19** உற்பத்திச் செயன்முறை ஒன்றிலுள்ள நீண்டகால உற்பத்தி (long run production) என்பதால் கருதப்படுவது யாதென சுருக்கமாக விபரிக்குக.

**1.20** தேசிய வருமானச் சுற்றுப் பாய்வின் கசிவுகளுக்கான (எடுப்பனவுகளுக்கான) இரண்டு (02) உதாரணங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A நிறைவு*

# பகுதி B

(மொத்தம் 40 புள்ளிகள்)

## வினா 02

(a) பொருளாதாரமற்ற பொருள்களின் மூன்று (03) பண்புகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) திட்டமிடப்பட்ட பொருளாதார முறைமையினால் எவ்வாறு அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன என்பதை **விபரிக்குக.**
(04 புள்ளிகள்)

(c) உற்பத்திக் காரணியான உழைப்பின் (labour) மூன்று (03) பண்புகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

(a) **பொருள் B** இன் கேள்விச் சமன்பாடு (Qd) மற்றும் நிரம்பல் சமன்பாடு (Qs) என்பன கீழே தரப்பட்டுள்ளன:

$$Qd = 160 - 10p$$

$$Qs = 30p$$

மேலுள்ள தகவல்களைப் பயன்படுத்தி,

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(i) வரைபைப் பயன்படுத்தி சமநிலை விலை மற்றும் கணியத்தை **இனங்காண்க.** (04 புள்ளிகள்)

(ii) உற்பத்தியாளர் மிகையைக் **கணிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) நேரில் வரியொன்றாக அரசாங்கத்தினால் பண்டமொன்றிற்கு அலகு வரியொன்று விதிக்கப்படுவதால் ஏற்படும் விளைவுகளை (consequences) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

(a) பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்படக்கூடிய மூன்று (03) நடவடிக்கைகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) இலத்திரனியல் பணத்தைப் பயன்படுத்துவதன் மூன்று (03) அனுகூலங்களைக் **குறிப்பிடுக.**
(03 புள்ளிகள்)

(c) இலங்கை மத்திய வங்கியின் இரண்டு (02) அளவுசார் (quantitative) நாணயக் கொள்கைச் சாதனங்களை (instruments) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

(a) "வர்த்தக நிலுவை (Terms of Trade)" என்னும் பதத்தை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) முழு நயக் கோட்பாட்டை உதாரணமொன்றுடன் **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாயை மதிப்பிறக்கம் செய்வதால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளைக் குறைப்பதற்கு எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் மூன்றினைக் (03) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B நிறைவு*

# பகுதி C

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

(A) ஒரு வருட காலப்பகுதிக்கான பொருளாதாரம் ஒன்றின் தேசிய கணக்குகளுடன் தொடர்புடைய பின்வரும் அனுமானத் தரவுகள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

| | **ரூபா (மில்லியனில்)** |
|---|---|
| தனியார் நுகர்வுச் செலவினம் | 7,500 |
| அரசாங்க நுகர்வுச் செலவினம் | 2,400 |
| மொத்த உள்நாட்டு மூலதன உருவாக்கம் | 800 |
| ஏற்றுமதிகள் | 1,300 |
| இறக்குமதிகள் | 2,000 |
| வெளிநாட்டிலிருந்தான நிகர காரணி வருமானம் (நிகர வெளிநாட்டு முதன்மை வருமானம்) | (600) |

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) பின்வருவனவற்றைக் **கணிப்பிடுக** :

(i) மொத்த உள்நாட்டுச் செலவினம் (GDE) – சந்தை விலையில் (04 புள்ளிகள்)

(ii) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) – சந்தை விலையில் (03 புள்ளிகள்)

(iii) மொத்தத் தேசிய வருமானம் (GNI) – சந்தை விலையில் (02 புள்ளிகள்)

(b) தேசிய வருமானக் கணக்குகள் மீதான இரண்டு (02) வரையறைகளை (limitations) **நிரற்படுத்துக.** (02 புள்ளிகள்)

(B) ஒரு நாட்டின் எதிர்மறையான பொருளாதார வளர்ச்சி ஏற்படுத்தக்கூடிய மூன்று (03) விளைவுகளைக் (consequences) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(C) பேரினப் பொருளாதார நோக்கங்கள் மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C நிறைவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| அறிவு (1) | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | வரைக (Draw) | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | தொடர்புபடுத்துக (Relate) | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | கூறுக/ குறிப்பிடுக(State) | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | அடையாளங்காண்க / இனங்காண்க (Identify) | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | நிரற்படுத்துக / பட்டியலிடுக (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | ஏற்பிசைவு செய்க (Recognize) | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret) | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | விளக்குக (Describe) | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | விபரிக்குக (Explain) | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define) | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile) | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | வரைக (Graph) | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | மதிப்பிடுக (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | தீர்க்குக (Solve) | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | தயாரிக்குக (Prepare) | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate) | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | கணிக்குக / கணிப்பிடுக (Calculate) | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | பிரயோகிக்குக (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | தொடர்பாடுக(Communicate) | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | சுருக்கமாகக் குறிப்பிடுக(Outline) | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | வேறுபடுத்துக (Contrast) | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss) | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | பகுப்பாய்வு செய்க (Analyze) | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |